# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 11.11.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

1974 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் பாராளுமன்றத்தில் அஹ்மதிகள் முஸ்லிம்கள் அல்லர் என சட்டம் இயற்றினர். அப்போதிருந்தே அஹ்மதிகள் மீது குறிப்பாக பாகிஸ்தானில் கொடுமைகளும், துன்பங்களும், துயரங்களும் கொடுக்கப்பட்டு வருகின்றன. அல்லது அவர்களுக்கு பூமி சுருக்கப்பட்டு வருகிறது. பிறகு ஜெனரல் ஜியாவுல் ஹக் தமது பதவியை முழுமையாகப் பயன்படுத்தி இந்த சட்டத்தை மேலும் கடினப்படுத்தினார். அவர் இவ்வாறு கூறுகிறார்:

அதாவது அஹ்மதிகள், தங்களை அஹ்மதிகள் என்று கூறுவதில்லை. மாறாக காதியானிகள் அல்லது மிர்ஸாயிகள் என்று கூறுவார்கள். அவர்களுக்கு எந்த மதிப்பும் கிடையாது. நாம் அவர்களுக்கு எதிராக சட்டம் இயற்றியுள்ளோம். அவர்களை நமது கூட்டத்திலிருந்து அதாவது முஸ்லிம் உம்மத்திலிருந்து வெளியேற்றியுள்ளோம். அவர்களிடம் நாம் கூறியுள்ளோம். நீங்கள் உங்களை முஸ்லிம் அல்லாதவர்கள் என்று கூறுங்கள். இவர்களிடம் நீங்கள் கலிமா சொல்லாதீர்கள் என்று கூறியுள்ளோம். இவர்களிடம் நீங்கள் எவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறாதீர்கள் என்று கூறியுள்ளோம். இவர்களிடம் உங்களை முஸ்லிம் என்று கருதக்கூடிய வகையில் எந்தவொரு சின்ன செயலைக்கூட செய்யக்கூடாது என்று கூறியுள்ளோம். ஆனால் இதன் பிறகும் கூட நீங்கள் இந்த அனைத்து விஷயங்களிலிருந்தும் தவிர்ந்திருப்பதில்லை. மீண்டும் நீங்கள் ஒரு உண்மையான உறுதியான முஸ்லிம்களிடம் காணப்பட வேண்டிய அனைத்து செயல்களையும் கடைபிடித்து வருகிறீர்கள். எனவே நாம் உங்களை கைது செய்து தண்டிப்போம். அல்லது உங்களை இந்த சட்டத்தை மீறிய குற்றத்திற்காக நீங்கள் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளோம் என்று கூறுவதனால் உங்களை தூக்கிலிடுவோம். இவ்வளவு சிறிய எண்ணிக்கையில் இருந்து கொண்டு பெரும் எண்ணிக்கையில் உள்ள எங்களின் உள்ளங்களை 'நாங்கள் முஸ்லிம்கள்' என்று உங்களை நீங்கள் கூறுவதன் மூலம் காயப்படுத்துகின்றீர்கள். உங்களுக்கு எவ்வளவு தைரியம்? எனவே இதுதான் பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளிடம் நடந்து கொள்ளும் விதமும், சட்டத்தின் சாராம்சமும் ஆகும். இவர்கள் அஹ்மதிகளைப் பற்றி எப்படியெல்லாம் கூறியிருக்கிறார்கள் என்றால் அஹ்மதிகள் சிறுபான்மையினர் என்ற கோஷத்தை எழுப்பி அஹ்மதிகளை தமது ஈமானிலிருந்து விலக்குவதற்காக முயற்சி செய்கின்றார்கள்; முயற்சி செய்து கொண்டும் இருக்கின்றார்கள். இவை ஒரு புதிய விஷயம் கிடையாது.

மார்க்கங்களின் வரலாற்றில் இதனைத்தான் பார்க்க முடிகின்றது. ஒவ்வொரு காலத்தின் ஃபிர்அவ்னும் தனது காலத்தின் நபிமார்கள் மற்றும் இறைவனைச் சார்ந்த மக்களை இவ்வாறு தான் கூறி வந்துள்ளார்கள். திருக்குர்ஆனின் இந்த கருத்து இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஃபிர்அவன் கூறியதாக திருக்குர்ஆனில் வருகிறது:

*அவர்கள் ஒரு சிறிய கூட்டத்தினரேயாவர். இருப்பினும் அவர்கள் நம்மை கோபமூட்டிக் கொண்டிருக்கின்றனர். (26:55-56)*

எனவே அஹ்மதிகளாகிய நாம் இவ்வாறு எதிர்ப்புகளைக் காணும் போது நமது ஈமான் புத்துணர்ச்சி அடைகின்றது. நபிமார்களுடைய வரலாறு திரும்புகிறது. இன்று நாம் குறைவாக இருக்கின்றோம். நாம் உலகின் பார்வையில் ஒரு பொருட்டே அல்ல. நாம் பாவம் செய்கின்றோம் என்றோ, தீமை செய்கின்றோம் என்றோ அவர்கள் நம் மீது கோபம் அடைவதில்லை. நாம் சட்டங்களை எதிர்த்து நாட்டிற்கு இழப்பு ஏற்படுத்துகின்றோம் என்றோ, நாம் சட்டங்களை மதிக்காமல் மக்களுடைய உரிமைகளைப்

புறக்கணிக்கிறோம் என்றோ நாம் தீவிரவாதம் புரிகின்றோம் என்றோ அவர்கள் நம்மீது கோபம் அடைவதில்லை. மாறாக நாம் அல்லாஹ் மற்றும் அவனது ரஸுல் (ஸல்) அவர்களுடன் அன்பு மற்றும் விசுவாசத்துடன் தொடர்பு கொண்டுள்ளோம் என்றும் நாம் நாட்டின் மீது கொண்ட பற்றின் காரணமாக அமைதியை வெளிப்படுத்துகின்றோம். நாம் அல்லாஹ்வின் படைப்பினங்களின் உரிமைகளை ஏன் பறிப்பதில்லை? நாம் நாட்டில் அநீதி மற்றும் அக்கிரமம் செய்கின்ற தீவிரவாதத்தில் ஏன் பங்கு பெறுவதில்லை? என அவர்கள் நம்மீது கோபம் அடைகிறார்கள்.

எனவே அவர்களுக்கு நமது பதில் என்னவென்றால் நாங்கள் இக்காலத்தின் இமாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பர், பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிக்கேற்ப தோன்றிய மஸீஹ் மவ்வூது மற்றும் மஹ்தி மஃஹூத்–ஐ ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் ஆவோம். அவர்கள் உலகத்திற்கு வந்து தமது தலைவருடைய சுன்னத்தை நிலைநாட்டி உலகத்தை அன்பு, நேசம், அமைதி மற்றும் சமாதானத்தின் கோட்பாடுகளை கற்றுக் கொடுக்க வந்துள்ளார்கள்.

எனவே நாம் இக்காலத்தின் இமாமின் பைஅத்தின் கீழ் வந்த பிறகு இவை அனைத்தையும் செய்து வருகின்றோம் என்றால் நாம் நமது தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டிய உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்கின்றோம் என்பதாகும். மேலும் ஆரம்ப காலகட்டத்தில் முஸ்லிம்கள் நிலைநாட்டிய முன்மாதிரியை நிலைநாட்ட முயற்சி செய்கின்றோம். நமக்கு இந்த தைரியம் மற்றும் மரணத்தினை நேருக்கு நேர் சந்திப்பதற்குரிய தன்னம்பிக்கை இக்காலகட்டத்தின் மறுமலர்ச்சிக்காக அல்லாஹ் அனுப்பிய அல்லாஹ்வின் பயில்வான்தான் நம்மிடம் உருவாக்கினார். நமக்கு நமது வாழ்வை விட ஈமானை பாதுகாப்பதற்கான உணர்வையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர், கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து ஈமானைக் கொண்டு வந்து நம்மிடம் தந்தார். எனவே நாம் எல்லா வித தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்கின்றோம். மேலும் நாம் இதனை சரியாகப் புரிந்தவாறு தயாராக இருக்கின்றோம். அதாவது அல்லாஹ் ஜரியுல்லாஹி ஃபீ ஹுவலில் அன்பியாயி என்று கூறியிருக்கின்றான். அதாவது இறைவனுடைய ரஸுல் நபிமார்களுடைய ஆடையில் அந்த இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம்.

**பிறகு பராஹீனே அஹ்மதிய்யா பாகம் ஐந்தில் இதற்கு விளக்கம் எழுதியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த இறை வஹியின் பொருள் என்னவென்றால், ஆதம் முதல் கடைசி வரை உலகில் எத்தனை நபிமார்கள் அல்லாஹ்வின் புறமிருந்து வந்துள்ளார்களோ, அவர்கள் இஸ்ரவேலர்களாக இருந்தாலும் சரி அல்லது இஸ்ரவேலர்கள் அல்லாதவராக இருந்தாலும் சரி அவர்கள் அனைவரின் சிறப்பான அம்சம் அல்லது சிறப்பான பண்புகளிலிருந்து இந்த அடியானுக்கு சிறிது பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் பண்பிலும், சம்பவங்களிலும் இந்த அடியானுக்கு பங்கு தரப்படாத எந்த நபியுமில்லை. ஒவ்வொரு நபியுடைய இயல்பின் சாயலும் எனது இயல்பில் இருக்கின்றது. இவ்வாறு இறைவன் எனக்கு வஹி அறிவித்தான். எனவே அனைத்து நபிமார்களிடமிருந்தும் அவர்களுக்கு பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. சில நபிமார்களின் எதிர்ப்பின் வரலாற்று சம்பவமும் அவர்களுடனும் அவர்களது ஜமாஅத்துடனும் நடைபெற வேண்டியுள்ளது.

இந்த எதிரான செயல்பாடுகள் அல்லது சட்டதிட்டங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு எந்தவித இழப்பையும் ஏற்படுத்தி விட முடியாது. ஏனென்றால், இதனுடன் அல்லாஹ் நபிமார்களுக்கு அளித்த வெற்றியைப் போன்ற வெற்றியையும் மேன்மையையும் அளிப்பதாக கூறியிருக்கின்றான். மாறாக அதனை விட அதிகமாக வெற்றியினை வழங்குவதாக கூறியிருக்கின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஓர் இல்ஹாம் வந்தது. அதில் அல்லாஹ் கூறுகின்றான்:**

*புஷ்ராக பிஅஹ்மதீ - எனது அஹ்மதே! உமக்கு நற்செய்தி!*

எனவே இந்த அடக்குமுறைகள், கொடுமைகள், அநீதிகள் போன்றவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின ஜமாஅத்தின் முன்னேற்றத்தினை தடுக்க முடியாது. இறுதியில் வெற்றியின் வாசல்கள்

திறப்பதைப் பற்றி அல்லாஹ் அன்னாருக்கு தான் தெரியப்படுத்தியுள்ளான். இருப்பினும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை சில இடங்களில் கொடுமைகளை சகித்துக் கொண்டு அதனை கடக்க வேண்டியதுள்ளது. பலமுறை பல கோணங்களில் இந்த நற்செய்தியினை கூறியிருக்கின்றான்.

**ஆஸ்மானி ஃபைஸ்லா என்ற நூலில் அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் என்னை நோக்கி மிக தெளிவான வார்த்தைகளில் கூறினான். நான் வெற்றியாளன் ஆவேன். உமக்கு வெற்றியினை வழங்குவேன். ஒரு அதிசயமான உதவியினை நீர் காண்பீர். நிராகரிப்பவர்களில் எவர்களது நியதியில் ஹிதாயத் உள்ளதோ அவர்கள், எனது இறைவா! எனது பாவங்களை மன்னிப்பாயாக! நாங்கள் தவறிழைத்தவர்கள் ஆவோம் என்று கூறியவாறு தனது சஜ்தாக்களில் விழுவார்கள்.

**மேலும் ஓர் இல்ஹாம் வந்தது.**

*அதாவது உனக்கே வெற்றி மற்றும் உனக்கே மேன்மை.*

எனவே இந்த கஷ்டங்கள், ஜமாஅத்திற்கு எதிரான செயல்கள், சட்டதிட்டங்கள் போன்றவை குறிப்பாக பாகிஸ்தான் ஜமாஅத், இந்தோனேஷியா ஜமாஅத், மலேசியா ஜமாஅத், அல்லது சில முஸ்லிம் நாடுகளின் ஜமாஅத்துகளில் நடைபெற்று வருகின்றன. இவர்களுக்கு பின்னால், அல்லாஹ் நமக்கு இதனை விட அதிகமான வெற்றிக்கான, மேன்மைக்கான நற்செய்தியினை வழங்குகின்றான். இதில் நமது அநீதியிழைக்கப்பட்ட அஹ்மதிகள் வாழ்ந்து வருகின்றனர்.

அல்லாஹ்வின் அருளால் காலத்தின் இமாம் நமக்கு வழங்கிய ஈமானின் தைரியம், இதுபோன்ற கஷ்டங்களையும், துன்பங்களையும் பொருட்படுத்துவதேயில்லை. வேறு ஏதாவது உலக ஜமாஅத்தாக இருந்திருந்தால் இந்த அநீதியின் காரணமாக எப்போதோ இந்த அநியாயக்காரர்களுக்கு முன்னால் மண்டியிட்டிருக்கும். அல்லது நயவஞ்சகத்தன்மையினை மேற்கொண்டிருக்கும். ஆனால் இறை அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத் அநீதியினை எதிர்கொள்வது மட்டுமல்ல. மாறாக எல்லா வித சாதகமற்ற சூழ்நிலையிலும் முன்னேற்றத்தின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. அறிவுடையவர் யாராவது இருந்தால், நேர்மையாளர்கள் யாராவது இருந்தால் அவருக்கு இந்த ஒரு ஆதாரமே இந்த ஜமாஅத் இறைவனால் உருவாக்கப்பட்ட ஜமாஅத் என்பதற்கு போதுமானதாக இருக்க வேண்டும்.

எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் இல்ஹாமில் அறிவித்துள்ளான் என்பதனை நான் உங்களுக்கு வாசித்துக் காட்டினேன். ஒரு காலம் வரும்; அப்போது இவர்களிலிருந்தே பெயர் தாங்கி முல்லாக்களின் தாக்கத்தின் கீழ் இருப்பவர்கள், அல்லது அவர்களின் மீதுள்ள பயத்தின் காரணமாக, அல்லது சட்டத்தின் பயத்தினால் உண்மையைக் கண்டு, உணராமல் இருப்பவர்கள், அல்லாஹ்விடம் தனது பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டியவாறு சஜ்தாவில் வீழ்ந்தவாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பருடன் இணைவதில் பெருமையை உணர்வார்கள். தீய இயல்பு கொண்டவர்கள் தனது முடிவை எவ்வாறு காண்பார்கள் என்றால், முந்தைய நபிமார்களின் எதிரிகளுக்கு, உண்மையின் எதிரிகளுக்கு நேர்ந்த அதே நிலையை இவர்களும் அடைவார்கள். இவ்வாறு உலகத்திற்கு படிப்பினையின் அடையாளமாக தென்படுவார்கள்.

இதனைப் பற்றி திருக்குர்ஆனில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் கூறுகின்றான்:

*அவர்கள் பூமியில் பயணம் செய்வதில்லையா? அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எவ்வாறாயிற்று? என்பதனை அவர்கள் பார்த்துக் கொள்ளட்டும். அவர்கள் ஆற்றலிலும் பூமியில் அவர்கள் விட்டுச் சென்ற அறிகுறிகளிலும் இவர்களை விட வல்லவர்களாக இருந்தனர். ஆனால் அல்லாஹ் அவர்களின் பாவங்களின் காரணமாக அவர்களைப் பிடித்துக் கொண்டான். அல்லாஹ்வின் பிடியிலிருந்து காப்பாற்றுபவர் எவரும் அவர்களுக்கு இருந்ததில்லை. இதற்கு காரணம், அவர்களிடம் அவர்களின் தூதர்கள் தெளிவான*

*அடையாளங்களுடன் வந்தனர். ஆனால் அவர்கள் நிராகரித்தனர். எனவே அல்லாஹ் அவர்களை பிடித்து விட்டான். நிச்சயமாக அவன் வல்லவனும் தண்டனை அளிப்பதில் கடினமானவனுமாவான். (40:22-23)*

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எந்தெந்த இல்ஹாம்களை கூறினேனோ அது அவர்கள் சுயமாக வாதிட்டவை கிடையாது. மாறாக இது இல்ஹாமாகும். அதாவது அல்லாஹ் என்னுடன் இருக்கின்றான். வெற்றிகள் கிடைப்பதைப் பற்றி கூறியிருக்கின்றான். இறைவன் பக்கம் ஒரு விஷயத்தை சுட்டிக் காட்டிக் கூறுவதென்பது ஒரு மிகப்பெரிய விஷயமாகும். அல்லாஹ் அப்படிப்பட்ட மக்களை மன்னிப்பதில்லை. அதாவது அவன் பக்கம் தவறான விஷயங்களை இட்டுக்கட்டி கூறுவதனை அவன் மன்னிக்க மாட்டான்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இறை உதவிகளை நாம் பார்க்கும் போது, உண்மையில் இந்த விஷயங்கள், நமது நம்பிக்கைக்கு மேலும் வலுவூட்டுகின்றது. அதாவது எவ்வாறு அல்லாஹ் அன்னாருடைய காலகட்டத்தில் உதவி புரிந்தவாறு வெற்றியினை வழங்கினானோ வருங்காலத்திலும் அவ்வாறே செய்வான். இன்னும் தனது அருளால் வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றான். இன்னும் நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் மூலம் அல்லாஹ் தனது உதவிகளை வழங்கிக் கொண்டு தான் இருக்கின்றான் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

மேற்குறிப்பிட்ட வசனத்திலிருந்தும் இந்த விஷயம் மிகவும் தெளிவடைகிறது. அதாவது நபிமார்களின் எதிரிகள், இறை ஜமாஅத்தின் மீது அநீதியிழைக்கக் கூடியவர்களுக்கு அல்லாஹ் ஒரு காலம் வரை காலக்கெடு வழங்குவான். பிறகு ஒரு நாள் கண்டிப்பாக பிடிப்பான். அல்லாஹ்வின் பிடி வரும்போது எந்த சக்தியும், எந்த ஆற்றலும், எந்த பெரும்பான்மையான எண்ணிக்கையும் பயன் தராது.

இன்று அஹ்மதிகள் மீது கொடுமையிழைக்கக் கூடியவர்கள், சட்டங்களை இயற்றக் கூடியவர்கள், அஹ்மதிகளை பிச்சைப் பாத்திரத்தை ஏந்த வைப்போம் எனக் கூறியவர்கள், (நவூதுபில்லாஹ்) அஹ்மதிய்யத்தை புற்றுநோய் என கூறியவர்கள் ஆகிய இவர்களிடம் கொஞ்சம்தான் சக்தியிருக்கிறது. அல்லாஹ் அவர்களை அழிக்க நினைக்கும் போது அவர்களுக்கு தெரியக்கூட செய்யாது. இவர்களைப் போன்றவர்களின் உதாரணங்களை அல்லாஹ் நமக்கு கூறியிருக்கின்றான். அவர்களோ மிகப்பெரும் ஆற்றல் பெற்ற செல்வந்தவர்களாக இருந்தார்கள். இன்று நம்மீது அநீதியிழைக்கக்கூடிய இவர்களிடமோ தனக்கு தேவையான பொருளாதார வசதி கூட இல்லை. ஆட்சி நடத்துவதற்கான அந்நிய சமுதாயத்திடம் கடன் வேண்டுகிறார்கள். ஆட்சியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இது சிந்திக்க வேண்டிய இடமாகும். தன்னையும் அறியாமலேயே அநீதியிழைப்பதும், அநீதியிழைப்பதற்கு துணை போவதும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரை, தனது ஒவ்வொரு நூல்களிலும், அரசாங்கப் பத்திரிகைகளிலும் தவறான வார்த்தைகளில் எழுதி வருகின்றனர். பாகிஸ்தானில் இன்றைய நாள்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி அசிங்கமாக எழுதாத எந்தவொரு விண்ணப்பப் படிவமும் இல்லை. எந்தவொரு டாக்குமெண்டை எடுத்தாலும் சரி, எந்தவொரு சான்றிதழை வாங்க வேண்டும் என்றாலும் பள்ளிக்கூடத்தில் சேர்வதாக இருந்தாலும் சரி, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி அசிங்கமாக எழுதாத எந்தவொரு விண்ணப்பப் படிவமும் கிடையாது. மேலும் நீங்கள் முஸ்லிம் என்றால் இதில் கையெழுத்து இடுங்கள் என்று கூறப்படுகிறது.

பஜாரிலும், அலுவலகங்களிலும், பூங்காக்களிலும், பெரிய பெரிய அசிங்கமான வார்த்தைகளைக் கொண்ட சுவரொட்டிகளை ஒட்டி இவர்கள் அனைவரும் பெரிய பெரிய பாவத்திற்கு ஆளாகின்றனர். இதையெல்லாம் பார்த்தும் அமைதியாக இருக்கக் கூடியவர்களும் தம்மை அறியாமலேயே பாவங்களில் மூழ்கி விடுகின்றார்கள். ஒன்று அவர்களது நேர்மை அழிந்து விட்டது. அல்லது இறைவன் மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது.

தவறான வழியில் அஹ்மதிகள் மீது வழக்குகள் போட்டு அல்லாஹ்வின் பார்வையில் வெறுக்கத்தக்க செயல்களில் ஈடுபடுகின்றனர்.

**அல்லாஹ் கூறுகின்றான்:** *நீங்கள் பகைவர்களுடனும் நேர்மையுடன் நடந்து கொள்ளுங்கள். உங்கள் மீது அநீதியிழைத்தவர்களுடனும் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். அவர்களுக்கு அநீதியிழைக்காதீர்கள்.*

ஆனால் இதற்கு நேர்மாறாக இவர்களது செயல்கள் இருக்கின்றது.

**அல்லாஹ் கூறுகின்றான்:** பொய் கூறுவது இணை வைப்பதற்கு சமமாகும். இணை வைப்பது எவ்வளவு பெரிய அசிங்கமான மற்றும் எவ்வளவு பெரிய பாவம் என்றால் அல்லாஹ் அதனை மன்னிக்கவே மாட்டான்.

ஆனால் இவர்களது நிலைமை எவ்வாறு இருக்கின்றது? இவர்களது தக்வா, நன்மைகள் அல்லாஹ்வின் ரஸுல் (ஸல்) அவர்களுடைய பெயரை மேன்மைப்படுத்தக் கூடிய நிலையை அஹ்மதிகளாகிய நாங்கள் தினமும் தான் பார்க்கின்றோம்.

ஒரு சம்பவத்தை நான் உங்கள் முன்னர் வைக்கின்றேன். இதிலிருந்து இவர்களது உண்மை நிலை தெரிய வந்து விடும். கடந்த நாட்களில் ஓர் அஹ்மதி மீது பொய்யான வழக்கு ஒன்று போடப்பட்டது. கொலை வழக்கில் அவர் சேர்க்கப்பட்டிருந்தார். பொதுமக்கள் அந்த நபர்களிடம் இவ்வாறு ஏன் அநீதியிழைக்கின்றீர்கள்? இது தவறாகும் என்று கூறினர். அதற்கு அந்த வழக்குத் தொடுத்தவர்கள் மவ்லவிகளின் தாக்கத்திற்கு ஆளானவாறு இவ்வாறு கூறினார்கள். இது தவறு என்பது எங்களுக்கு தெரியும். மேலும் இவர் ஒன்றும் அறியாதவரும், நிரபராதியும் ஆவார் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் இவர் அஹ்மதி ஆவார். எனவே இவர் மீது வழக்குத் தொடுத்துள்ளோம் என்றனர். இன்று இவர் அஹ்மதிய்யத்திலிருந்து வெளிவந்து விட்டால் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களை அசிங்கமாகப் பேசினார் என்றால், வழக்கை நாங்கள் வாபஸ் வாங்கி விடுவோம். மேலும் அவர் சிறையிலிருந்து வெளிவருவதற்கான எல்லா முயற்சியும் செய்வோம். மேலும் வெளியில் வரும் போது நாங்கள் அவருக்கு மாலை அணிவிப்போம். அவரை வரவேற்போம். இதுதான் இவர்களது நிலையாகும். இவ்வாறு இருந்தும் கூட இவர்கள் உறுதியுடன் முஸ்லிம்கள் என்று தம்மைக் கூறிக் கொண்டு அஹ்மதிகளை காஃபிர்கள் என்கின்றனர். பொய் இவர்களது பார்வையில் ஒரு பொருட்டே அல்ல.

அஹ்மதிய்யத்தின் எதிரிகளே! அந்த இறைவனுக்கு அஞ்சுங்கள். அவனுக்கு முன்பு உங்களுடைய செல்வம், உங்களுடைய கர்வம், உங்களுடைய ஆணவம், உங்களுடைய பள்ளிவாசல்களின் இமாமத், உங்களுடைய அரசியல் கட்சிகள், உங்களுடைய அரசாங்கம், உங்களுடைய பெரும்பான்மை போன்றவை ஒன்றுமே இல்லை.

எங்கள் மீது இழைக்கப்பட்ட இந்த அனைத்து கொடுமைகளுக்குப் பதிலாக எங்களது பதில் திருக்குர்ஆன் இந்த வசனத்தில் கூறப்பட்டவையே ஆகும். *நிச்சயமாக அவன் மிகவும் சக்தி வாய்ந்தவன் ஆவான்.*

இந்த கொடுமையின் எல்லை எந்த அளவு சென்று விட்டதென்றால், பள்ளிக்கூடங்களில், அஹ்மதி குழந்தைகளிடம் நீங்கள் மிர்ஸாயி என்றும், காஃபிர்கள் என்றும் கூறப்படுகின்றது. இதனால் நீங்கள் இங்கு படிக்க முடியாது என்றும், பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கு ஒரேயொரு வழியுள்ளது. அது என்னவென்றால்,மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களை தீயவார்த்தைகளால் ஏச வேண்டும் என்பதாகும்.

ஒருவேளை பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியர் அல்லது தனியார் பள்ளிக்கூடத்தின் எஜமானர் நேர்மையுடன் நடந்து கொள்ளக் கூடிய மனிதராக இருந்தால், அவர்களிடம் அஹ்மதி பிள்ளைகள் இந்த பள்ளிக்கூடத்தில் படித்தால் நாங்கள் எங்களது பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பமாட்டோம் என்று கூறுகிறார்கள். மேலும் உங்களுக்கு எதிராக போராட்டம் நடத்துவோம். உங்களது பள்ளிக்கூடத்தை மூடச் செய்துள்ளோம் என்று கூறுகின்றனர்.

ஒருவேளை நேர்மையுடன் ஒருவர் இந்த மவ்லவிகளின், குழப்பவாதிளின் பேச்சைக் கேட்கவில்லை என்றால் அவர்களுக்கும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்ற மிரட்டல்கள் விடப்படுகின்றன.

எனவே ஒரு குழப்பம் நாட்டினை சூழ்ந்துள்ளது. அமைப்பாளர்கள், ஆட்சியாளர்கள் தனது அரசியல் நோக்கம் மற்றும் இயலாத்தன்மை காரணமாக இந்த மவ்லவிகள் மற்றும் தீவிரவாதத்தை விரும்புபவர்களின் பொம்மைகளாக உள்ளனர்.

எனவே நான் கூறியது போன்று அது மவ்லவிகளாக இருந்தாலும் சரி, சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி அல்லது அரசாங்கத்தினை சேர்ந்த எவராக இருந்தாலும் சரி எவரெல்லாம் இந்த அநீதியில் பங்கு கொண்டுள்ளார்களோ அவர்கள் நினைவில் கொள்ளட்டும். அல்லாஹ் தண்டனை வழங்குவதில் கடுமையானவனாவான்.

இந்த விஷயம் முந்தைய பழைய சமுதாயங்களின் கட்டுக்கதை கிடையாது. மாறாக உயிருள்ள இறைவன், அனைத்து ஆற்றல்களுக்கும் எஜமானன் ஆவான் என்பது இன்றைய அடையாளமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை எதிர்க்கக்கூடியவர்கள், எதிர்ப்பில் எல்லாவிதமான எல்லைகளையும் மீறக்கூடியவர்கள் நினைவில் கொள்ளட்டும். உண்மைத்துவம் மற்றும் சத்தியத்தை மறுப்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்த உண்மைத்துவத்தினை மறுப்பது, இதனைப் பற்றி திருக்குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளது. இதனை இவர்கள் மிகவும் விருப்பத்துடன் படிக்கின்றார்கள். அல்லது படிப்பதாக வாதம் புரிகின்றார்கள்.

இவர்கள், இந்த உண்மையை மறுத்தவாறு தீய முடிவைக் கண்டவர்களுடன் இணைகின்றார்கள். அல்லது அவர்களுடைய தீய முடிவை அவர்களுக்கு வரக்கூடிய சமுதாயங்கள் கண்டது. அல்லது வரக்கூடிய சமுதாயங்களுக்கு அறிவுரை பெறுவதற்கு அடையாளமாக்கப்பட்டது. பிறகு இதில் இன்னும் ஒரு முரண்பாடு உள்ளது. அஹ்மதிகள் மீது கொடுமையிழைப்பதை தவிர வேறென்ன பாவங்களை அவர்கள் செய்யாமல் இருக்கின்றனர்? எல்லாவிதமான பாவங்களும் நாட்டில் பரவியுள்ளது. லஞ்சம், வேறு அனைத்து விதமான பாவங்களும், அசிங்கங்களும், ஒழுக்க சீர்கேடுகளும், திருட்டு, கொலை, கொள்ளை போன்றவை எல்லாவிதமான தீமைகளும் இன்று நமக்கு இவர்களிடம் தென்படுகின்றது.

எனவே இவை அனைத்தும் இறைவனுக்கு கோபத்தை உண்டாக்கக் கூடியது இல்லையா? அறிவீனர்களே! கொஞ்சமாவது சிந்தனை செய்யுங்கள். அல்லாஹ்விடம் எங்களுடைய துஆ என்னவென்றால், அல்லாஹ் சமுதாயத்தின் மீது கருணை புரிவானாக என்பதாகும்.

இன்று அஹ்மதிகளின் மீதுள்ள கடமை என்னவென்றால் அனைத்து விதமான அநீதிகளையும் தாங்கிக் கொண்டவாறு உம்மத்தின் மீது அனுதாபம் கொள்ள வேண்டிய காரணத்தால், மனித இனத்தின் மீது அனுதாபம் கொள்ள வேண்டிய காரணத்தால் எவ்வளவு தூரம் செயல் மூலம் முயற்சி செய்ய முடியுமோ செய்ய வேண்டும். அதனுடன் அதிகமாக துஆவிற்கு முக்கியத்துவம் கொடுங்கள். எங்கு ஆக்கப்பூர்வமாக செயல்பட முடியாதோ, எங்கு நமது பேச்சை கேட்க யாரும் தயாராக இல்லையோ, எங்கு சலாம் சொல்வதன் காரணமாக வழக்குகள் போடப்படுகின்றதோ அங்கு துஆவின் மூலம் அல்லாஹ்விடம் உம்மத்தின் சீர்திருத்தத்திற்காக இறைஞ்சி வேண்டுங்கள்.

நான் கூறியது போன்று அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வெற்றியையும் மேன்மையையும் வழங்குவான் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஏனென்றால் அல்லாஹ் எப்பொழுதும் தனது நபிமார்களுக்கு தன்னால் அனுப்பப்பட்டவருக்கு வெற்றியினை வழங்குகின்றான்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

*நானும் எனது ரஸூலும் வெற்றி பெறுவோம் என அல்லாஹ் தீர்மானித்து விட்டான். நிச்சயமாக அல்லாஹ் சக்தி வாய்ந்தவனும், மிகைத்தோனும் ஆவான். (58:22)*

இந்த வசனத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், வெற்றியினைத் தீர்மானிப்பது இறைவன் ஆவான். மேலும் இறைவன் கூறிய வெற்றி பெறுவதற்கான வழி அல்லது வெற்றி பெறுவதற்காக கூறப்பட்ட ஆதாரம் இறைவன் சக்தி வாய்ந்தவனாக இருக்கின்றான்; மிகைத்தவனாக இருக்கின்றான் என்பதே ஆகும்.

எனவே இதில் மூஃமின்கள், நிராகரிப்பாளர்கள், காஃபிர்கள், ஒவ்வொரு பிரிவினருக்கும் பாடம் இருக்கின்றது. மேலும் கவனம் செலுத்துங்கள் என்ற அறிவிப்பு இருக்கின்றது. மூஃமின்களுக்கு எல்லா சக்திகளுக்கும் எஜமானனாகிய அல்லாஹ், மேலும் மிகைத்தவனாகிய அவன் தீர்மானித்து விட்டான். அவனும் அவனது ரஸூலும் வெற்றி பெறுவார்கள் என்று முடிவு எடுத்து விட்டான் என்று கூறப்பட்டுள்ளது. பிறகு நீங்கள் உங்களுடைய பலவீனங்களையும், சிறுபான்மையான எண்ணிக்கையைப் பார்க்காதீர்கள். நாம் ஒரு பொருட்டல்ல என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். மாறாக உங்களுடைய ஈமானை வலுவூட்டுங்கள். அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்துங்கள். அல்லாஹ்வுடன் தொடர்பை மேம்படுத்த எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் முயற்சி செய்யுங்கள். அதன் எல்லையை அடையுங்கள். உங்கள் மீது விரல் வைத்து இறைவன் வெற்றியில் பங்கு கொள்ள வைக்கின்றான். நீங்கள் நன்மையினை செய்யுங்கள். இறைவணக்கத்தில் ஈடுபடுங்கள். இபாதத் உங்களுடைய படைப்பின் நோக்கமாகும். அதில் முன்னேறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அதன் மூலம் வெற்றியில் பங்கு கொள்ளுங்கள்.

எதிரிகளுக்கு சவால் என்னவென்றால் நீங்கள் எல்லா விதமான ஆற்றல்களுடன் முயற்சி செய்யுங்கள். ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் அவனது அன்பிற்குரியவர்களுக்கு வெற்றி வழங்குவான் என்பது அவனது தீர்மானமாகும். மேன்மை வழங்குவான் இன்ஷா அல்லாஹ். பிறகு உங்களுடைய திட்டங்கள், உங்களுடைய சூழ்ச்சிகள் ஒன்றும் அறியாத குழந்தைகளை கஷ்டப்படுத்தக் கூடிய உங்களுடைய முயற்சிகள், அஹ்மதிகள் வியாபாரத்தை நஷ்டப்படுத்தும் உங்களுடைய முயற்சிகள், அஹ்மதி பணியாளர்களை கஷ்டப்படுத்தும் உங்களுடைய முயற்சிகள், வழிப்போக்கர்கள் மீது பொய் வழக்கு தொடரும் உங்களுடைய முயற்சிகள் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் உடைய வெற்றியினை தடுத்து நிறுத்த முடியாது.

இது அடியானின் பணியாக இருந்திருந்தால் ஒருவேளை உங்களுடைய வலிமைகள் பயன்பட்டிருக்கலாம். ஆனால் இது இறைவனுடைய பணி ஆகும். இறுதியில் அல்லாஹ்வுடைய நியதிதான் வெற்றி பெறும். எனவே அல்லாஹ், நிச்சயமாக அல்லாஹ் சக்திவாய்ந்தவனும் வல்லமையுள்ளவனுமாவான் என்று கூறியுள்ளான். இதன் மூலம் ஒரு அறிவிப்பை செய்கின்றான். அதாவது இந்த வேலையை நான் தான் செய்வேன் என்று கூறியுள்ளான். மேலும் இங்கு சிறுபான்மை, பெரும்பான்மை, பொருளாதார ரீதியில் வசதி அல்லது வசதி குறைவு அல்லது வசதி வாய்ப்பில் ஏற்றத்தாழ்வு போன்றவை பொருட்டே கிடையாது.

பத்ர் போரிலும், உஹது போரிலும் அல்லது நபிமார்களின் எந்தவொரு போரிலும் வசதிவாய்ப்பு போரின் முடிவை தீர்மானித்ததா? நிச்சயமாக கிடையாது. ஆனால் ஒரு விஷயம் இறைவனுடைய வாக்குறுதி அனைத்தும் இறைவன் நம்பிக்கையூட்டிய பிறகும் இறைவனுடைய வெளிப்படையான அடையாளம் வந்த பிறகும் அல்லாஹ்வுடைய ரஸூல் தனது வசதிக்கேற்ப முயற்சிகளை கண்டிப்பாக வெளிப்படையாகவும் சிறிய அளவிலும் செய்வார்கள். ஆனால் அவர்களது உண்மையான கவனம் துஆவின் பக்கம் தான் இருக்கும். இதில் அனைவரையும் விட சிறந்த முறையில் முழுமையான முன்மாதிரியை நமது தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள்தான் வெளிப்படுத்தினார்கள்.

பத்ர் போர் இதனைப் பற்றி மேன்மையான காட்சியை நமக்கு வெளிப்படுத்து –கின்றது. இறைவனுடைய அனைத்து விதமான ஆறுதலும் வாக்குறுதியும் இருந்தும் கூட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நிம்மதியற்ற நிலையில் செய்த துஆக்கள், உருக்கம் போன்றவை எவ்வாறிருந்த போதிலும் அவை மரணத்தின் வேதனை போன்றிருந்தது. துஆவின் உருக்கத்தினால் பெருமானாருடைய போர்வை பல தடவை தோளிலிருந்து கீழே விழுந்து கொண்டேயிருந்தது. மேலும் இறைவன் நானும் எனது ரஸூலும் வெற்றி பெறுவோம் என்று கூறிய பிறகும் கூட நபிமார்கள் இறைவனிடம் மூழ்கியவாறு இறை திருப்தியை நிறைவேற்றுவதில் பங்கு கொள்ள முயற்சி செய்வார்கள்; பங்கு கொண்டும் விடுவார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் தூய்மையாக்கும் ஆற்றல் மற்றும் தர்பிய்யத் எப்படிப்பட்ட சஹாபாக்களை உருவாக்கியது என்றால் அவர்கள் பகல் முழுவதும் போரிலும் இரவு முழுவதும் இபாதத்துகளிலும் மூழ்கியிருந்தார்கள். உலக ரீதியில் பார்த்தோமென்றால் முஸ்லிம்கள் போரிட்ட ஒவ்வொரு

போரிலும் முஸ்லிம்களுக்கு எதிரிகளுடன் எந்த ஒப்புமையும் இல்லை. ஆனால் இறைவனுடன் உள்ள தொடர்பு மற்றும் இபாதத்துகள் அவர்களை அல்லாஹ் மற்றும் ரஸுலில் தன்னை மாய்த்தவாறு வெற்றியில் பங்கு வகிப்பவர்களாக ஆக்கியது. மேலும் இதனையும் நினைவில் கொள்ள வேண்டும். பகல் நேரங்களில் எதிரிகளுடன் போரிட்ட சமயத்திலும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்ட சமயத்திலும் கஷ்டமான நேரங்களிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய சஹாபாக்கள் கடமையான தொழுகைகளிலிருந்து ஒருபோதும் கவனமற்றவர்களாக இருந்ததேயில்லை. ஒரு சந்தர்ப்பம் வந்தது. எதிரிகளின் தொடர் தாக்குதல்களினால் முஸ்லிம்களுக்கு தொழுவதற்கான வாய்ப்பே கிடைக்கவில்லை. தொழுகையின் நேரமும் கழிந்து விட்டது. ஒரு தடவை ஐந்து தொழுகைகளும் ஜம்அ செய்து தொழப்பட்டது. அந்நேரம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எந்த அளவு வருத்தம் ஏற்பட்டதென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தீமை அழிந்து போகட்டுமே. இவர்களால் தான் நமக்கு ஐந்து நேரத் தொழுகையை சேர்த்து தொழ வேண்டியது ஏற்பட்டது. எதிரிகள் மீது சாபமிட்டார்கள்.

மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உயிர் மற்றும் பொருள் சேதத்தின் மூலம் கவலை அடையவில்லை. அதற்காக எதிரிகளுக்கு எதிராக பத்வாவும் கொடுக்கவில்லை. அத்தகையதொரு சந்தர்ப்பம் வந்தது என்றால் அதுவும் எதிரிகள்8 நமக்கு நமது இபாதத்துகள் பக்கம் கவனம் செலுத்துவதற்கு நமது இறைவன் பக்கம் குனிவதற்கு வாய்ப்பளிக்கவில்லை என்பதால் தான் பத்வா செய்தார்கள். அப்படியிருந்தும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உள்ளம் எப்போதும் இறை நினைப்பிலேயே இருக்கக் கூடியதாக இருந்தது. எந்நேரமும் அவர்களது நாவு இறைவனை நினைவு கூர்ந்து கொண்டே இருந்தது. ஆனால் கடமையாக்கப்பட்டவை வீணான போது அன்னாருடைய பொறுமைக்கு அப்பாற்பட்டு விட்டது.

எனவே எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். வெற்றியினைப் பற்றி இறைவனுடைய வாக்குறுதிகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும் அல்லாஹ்வுடன் நமது தொடர்பை மேன்மைப்படுத்துவது அவனது அருளை பெறுவதற்கு இபாதத்துகளின் பக்கம் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானதாகும். மிகவும் அவசியமானதாகும். இவை இல்லாமல் நாம் நம்மை அல்லாஹ், ரஸுலுடைய ஜமாஅத்தில் இணைந்தவர்கள் ஆவோம் எனக் கூற முடியாது. அல்லாஹ் மற்றும் ரஸுலுடைய ஜமாஅத்தில் இபாதத்துகளின் பக்கம் கவனம் செலுத்தக்கூடிய மக்கள் மட்டுமே இணைந்தவர்கள் ஆவார்கள். எனவே நாம் அஹ்மதியின் எதிரிகளின் கொடுமைகளை காணும்போது இதனை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது அல்லாஹ்வுடைய வாக்குறுதிகளில் பங்கு கொள்வதற்கு நாம் எப்போதும் நமது இபாதத்துகளில் கவனமற்றவர்களாக இருக்கக் கூடாது. நபிமார்கள் மற்றும் ரஸுல்மார்கள் வருவது அடியானை இறைவனுடன் சேர்ப்பதற்காகவே ஆகும். ஒருவேளை நாம் இந்த தொடர்பை வலுப்படுத்தக் கூடியவர்களாக ஆகவில்லை என்றால் பிறகு நம்மை நபியுடைய ஜமாஅத் என்று எவ்வாறு கூறுவீர்கள். நபி மற்றும் அவருடைய ஜமாஅத்திற்கு என்று தீர்மானிக்கப்பட்ட அந்த வெற்றிகளில் எவ்வாறு பங்கு கொள்வீர்கள். இதுவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் ஆகும். எனவே நாம் எப்போதும் இதனை கண் முன் நிறுத்த வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கிதாபுல் பரிய்யா என்ற தமது நூலின் முன்னுரையில் கூறுகின்றார்கள்:**

உண்மையில் இறைவன் மிகச் சிறந்தவனும், ஆற்றல்மிக்கவனும் ஆவான். அவன் பக்கம் அன்பு மற்றும் நன்றியுணர்வுடன் குனியக் கூடியவர்கள் எப்போதும் வீணாக்கப்படமாட்டார்கள். எதிரி நான் எனது சூழ்ச்சிகளின் மூலம் அவர்களை அழித்து விடுவேன் என்கிறான். மேலும் அவர்களை நசுக்கி விடுவேன் என தீய எண்ணம் கொள்கின்றான். ஆனால் இறைவன் கூறுகின்றான்: அறிவற்றவனே! நீ என்னுடனா சண்டையிடுகின்றாய்? என்னுடைய அன்பிற்குரியவரை நீ இழிவுபடுத்துகிறாயா? உண்மையில் வானத்தில் முன்னதாக தீர்மானிக்கப்பட்டதைத் தவிர பூமியில் எதுவும் நிகழ்வதில்லை. வானத்தின் கை எந்த அளவு நீளமாக ஆக்கப்பட்டுள்ளதோ அந்த அளவு பூமியின் எந்தவொரு கையும் நீளமாக ஆக்கப்படவில்லை. எனவே அநீதியிழைக்க திட்டமிடுபவர்களே! நீங்கள் அறிவிலிகள் ஆவீர்கள். நீங்கள் உங்களது வெறுக்கத்தக்க வெட்கக்

கேடான திட்டங்களை தீட்டும் போது மேன்மையான இறைவனை நினைவில் கொள்வதில்லை. அவனது நாட்டமின்றி ஒரு இலை கூட கீழே விழாது. எனவே அவர்கள் தனது எண்ணங்கள் எப்போதும் தோல்வி மற்றும் இழிவும் அடைவார்கள். அவர்களுடைய தீமையினால் நல்லடியார்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படுவதில்லை. மாறாக இறைவனுடைய அடையாளங்கள் வெளிப்படும். இறைவன் இந்த கண்களினால் தென்படவில்லை என்றாலும் தனது வித்தியாசமான அடையாளங்கள் மூலம் இறைவன் தன்னை வெளிப்படுத்துகின்றான்.

எனவே நாம் அன்பு மற்றும் நன்றி உணர்வுடன் வலிமைமிக்க இறைவன் முன்பு குனிந்திருந்தோம் என்றால், எதிரியுடைய எந்த முயற்சியும் ஜமாஅத்திற்கு எவ்வித இழப்பையும் ஏற்படுத்த முடியாது; இன்ஷா அல்லாஹ். இதனால்தான் கடந்த நாட்களில் நான் துஆ மற்றும் இபாதத்துகளின் பக்கமும், நஃபிலான நோன்பு வைப்பதற்கு குறிப்பாகவும் அறிவுறுத்தி இருந்தேன். தற்போது எதிரிகள் தனது எல்லாவிதமான ஆற்றல்களுடனும் அஹ்மதிய்யத் மீது தாக்குதல் நடத்துகின்றார்கள். இதனை எதிர்ப்பதற்கு நமது மிகப்பெரிய, மிகச் சிறந்த ஆயுதம் துஆ மட்டுமே ஆகும். அஹ்மதிய்யத்தின் எதிர்ப்பு தற்போது சர்வதேச நிலையை அடைந்து விட்டது. இது எதற்குரிய அறிகுறி என்றால், தற்போது அல்லாஹ் முன்பை விட அதிகமாக தனது வல்லமையை வெளிப்படுத்த விரும்புகின்றான் என்பதேயாகும். இன்ஷா அல்லாஹ் கண்டிப்பாக வெளிப்படுத்துவான்.

அஹ்மதிகளின் உலகமும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதாவது நாம் நமக்கு மிகவும் பிடித்தமானதாகவும் அன்பிற்குரியதாகவும் நமது இபாதத்துகளை வைக்க வேண்டும். அல்லாஹ்வுடனுள்ள தொடர்பை முன்பை விட அதிகமாக்க வேண்டும். அல்லாஹ் இதற்கான வாய்ப்பினை நம் அனைவருக்கும் தந்தருள்வானாக!

இன்னொரு விஷயத்யையும் நான் கூற விரும்புகின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய ஒரு இல்ஹாம் இருக்கிறது.

அதாவது பஃது கியாரா என்பதாகும். இதற்கு அஹ்மதிகள் சுயமாக பல விளக்கங்களைக் கூறி வருகின்றனர். எனக்கும் கடிதங்களையும் எழுதி வருகின்றனர். இதனைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

பதினோரு நாளா? பதினோரு வாரமா? பதினோரு மாதமா? பதினோரு வருடமா? என்பது எனக்கு தெரியாது. ஆனால் இந்தக் காலத்தில் எனது மீட்பிற்குரிய அடையாளம் வெளிப்படும்.

இன்று நவம்பர் 11 ஆம் தேதி ஆகும். நவம்பர் மாதமும் 11வது மாதமாகும். வருடமும் 2011 ஆகும். இந்த வகையில் அஹ்மதிகள் தத்தமது எண்ணத்தின் அடிப்படையில் சிந்திருக்கிறார்கள்.

ஒருவேளை பதினொன்றில் ஏதாவது இறை நியதி இருந்தால், அதாவது இன்றைய நாளில், இன்றைய மாதத்தில், இன்றைய வருடத்தில் இருந்தால் இன்ஷா அல்லாஹ் அது கண்டிப்பாக வெளிப்படும்.

ஆனால் இதனையும் நினைவில் கொள்ள வேண்டும். பல்வேறு இல்ஹாம்கள் இருக்கின்றன. அதில் இறை உதவி, ரஹ்மானிய்யத் என்ற பண்பின் வெளிப்பாடு ஆகியவற்றில் பக்தத்தன் என்ற வார்த்தையில் வாக்குறுதி உள்ளது. அதாவது இவை அனைத்தும் இன்றைய நாளிலிருந்து இன்றைய மாதத்திலிருந்து இன்றைய வருடத்திலிருந்து இந்த நியதி செயல்பட ஆரம்பித்து விடலாம். இது வெகு தூரத்தில் இல்லை. ஆனால் சில சமயங்களில் பலவீனமான மக்கள் சுயமாக ஏதாவது விளக்கத்தைக் கொடுத்து ஒரு முடிவை எடுக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் எடுத்த முடிவுக்கு மாற்றமாக நடைபெற்றால் பிறகு அவநம்பிக்கை அடைகின்றனர். பிறகு அல்லாஹ்வின் பக்கமும் ஏற்பட வேண்டிய கவனத்தில் குறைபாடு வந்து விடுகின்றது. அவநம்பிக்கை ஒரு மூஃமினுடைய அடையாளம் கிடையாது. வெற்றி நிச்சயமானதாகும். இது அல்லாஹ்வின் நியதி ஆகும். கண்டிப்பாக இது நடந்தே தீரும். இன்ஷா அல்லாஹ். மாறாக இறை தக்தீர் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. எதிரிகளின் எதிர்ப்பு, அஹ்மதிய்யத்தின் எதிரிகள் தமது நிலையில் ஆதங்கமடைந்தவர்களாக இருக்கின்றனர். இவை அனைத்தும் இறை வெற்றியின் ஆதாரமாகும்.

இந்த நேரத்தில் இந்தவொரு விஷயத்தையும் கூறிக் கொள்கின்றேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் காதியானிலிருந்து ஹிஜ்ரத் செய்த சம்பவத்தை எழுதியுள்ளார்கள். எவ்வாறு ஹிஜ்ரத்

செய்யப்பட்டது. அதற்கான தீர்மானங்கள் எடுப்பது எவ்வளவு கடினமாக இருந்தது. ஹிஜ்ரத் செய்வது பற்றி சிந்தனை செய்யப்பட்டு வந்தது. அவர்கள் கூறுகின்றார்கள். அந்த நேரத்தில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இல்ஹாம்களை படித்துக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் பஃது கியாரா என்ற இல்ஹாம் என் கண் முன் வந்தது. ஹிஜ்ரத் செய்வது உறுதியான விஷயமாகும் என்று நான் நினைத்தேன். போக்குவரத்து சம்பந்தமாக சில பிரச்சனைகள் வந்தன. எந்த தேதியில் போவது என்பதைப் பற்றி சிந்திக்கும் போது 11 ஆம் தேதி என்பதைப் பற்றி சிந்தனை வந்தது. பிறகு எவ்வளவு பிரச்சனைகளுக்குப் பிறகு கடைசியில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதிலேயும் தடை ஏற்பட்டது. எந்த நாளில் போக வேண்டும் என தீர்மானிக்கப்பட்டதோ அந்த நாளிலும் தடைகள் ஏற்படுவதற்கான சூழல் தென்பட்டது. 10.00 மணி அளவில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது அவர்கள் கூறினார்கள். நாம் செய்த ஏற்பாட்டின்படி இன்று செல்வது கஷ்டம் தான் என்றார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். எனது சிந்தனையில் இந்த பஃது கியார என்பதே இருந்து வந்தது. நான் பதினோரு மணிக்குப் பிறகே ஹிஜ்ரத் செய்வோம் என நினைத்தேன். திடீரென்று அல்லாஹ் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விட்டான். இது எல்லாம் திடீரென்றே நிகழ்ந்தது. 11 மணிக்குப் பிறகு அனைத்து ஏற்பாடுகளும் முழுமை அடைந்தது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த ஹிஜ்ரத் காதியானிலிருந்து பாகிஸ்தான் பக்கம் நடைபெற்றது. இருந்தபோதிலும் மேலும் பல கோணங்களிலும் இந்த இல்ஹாம் நிறைவேறி இருக்கின்றது.

அஹ்மதிய்யத்தை அழிக்க விரும்பிய சர்வாதிகாரி, அஹ்மதிய்யத்தை வேரோடு பிடுங்கி எறிய விரும்பினார். அவனுடைய ஆட்சி தானாகவே பிடுங்கப்பட்டு விட்டது. சரியாக 11 வருடங்கள் கழித்து அவரது ஆட்சி கவிழ்ந்தது. மேலும் சில சம்பவங்கள் உள்ளன. நான் கூறியது போன்று அதிலும் இந்த இல்ஹாம் பொருந்தும். ஆனால் முன்னறிவிப்பு மற்றும் இல்ஹாம்கள் திரும்பத் திரும்ப நிறைவேறிக் கொண்டே இருக்கும். மேலும் அதிகமான, தெளிவான, பிரகாசமான அடையாளத்தை நாம் எதிர்பார்க்க வேண்டும்.

மேலும் இதனையும் நினைவில் கொள்ளுங்கள். இந்த இல்ஹாமுடன் பார்ஸியின் இந்த இல்ஹாமும் எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் கூறுகின்றான். உனது மன்றாடல் விண்ணை எட்டி விட்டது. நான் இப்போது உமக்கு ஏதாவது ஆறுதல் மற்றும் நற்செய்தியினை வழங்கினால் நீர் ஆச்சரியப்படாதீர். இது எனது நடைமுறை மற்றும் எனது வள்ளல்தன்மைக்கு எதிரானது அல்ல. பதினொன்றுக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் என்று கூறுகின்றார்கள். பிறகு இங்கு துஆவைப் பற்றிய விஷயம் கூறப்பட்டுள்ளது. எனவே நாம் மிகவும் அதிகமாக துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நான் ஏற்கனவே கூறினேன். மேலும் நான் இதனால் தான் துஆவின் பக்கம் கவனமூட்டியுள்ளேன். எந்த அளவு துஆ செய்ய வேண்டும் என்றால், மன்றாடல்களின் வடிவிலுள்ள நமது துஆக்கள் விண்ணை எட்ட வேண்டும். அர்ஷின் கால்களை உலுக்க வேண்டும். பிறகு வெற்றியின் காட்சிகளை நாம் விரைவில் காண வேண்டும் இன்ஷா அல்லாஹ். எதிரிகளை பேரிழந்தவர்களாக நாம் பார்ப்போமாக! அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் முன்பை விட அதிகமாக துஆ செய்வதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இன்றும் நான் இரண்டு ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன். ஒன்று, நமது காதியானின் தர்வேஷ் ஆவார்கள். மதிப்பிற்குரிய சவுத்ரி முஹம்மது சாதிக் சாஹிப் நங்கிலி, இப்னு வரியாம் தீன் சாஹிப் நங்கிலி. அக்டோபர் 29 ஆம் தேதி கீழே விழுந்து விட்டார்கள். இடுப்பு எலும்பு முறிந்து விட்டது. இதய நோய்க்கும் ஆளாகி இருந்தார்கள். சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இருந்த போதிலும் நவம்பர் 5 ம் தேதி மரணமடைந்து விட்டார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தர்வேஷ்களுக்கான திட்டத்தை அறிவித்த போது இவர் சிறிய வயது உடையவராக இருந்தார்கள். இந்த திட்டத்தில் மிகவும் கலப்பற்ற முறையில் இணைந்தார்கள். கடைசி நேரம் வரை இந்த உடன்படிக்கையை பற்றுணர்வுடன் நிறைவேற்றினார்கள். அன்னார் ஜமாஅத் அலுவலகங்களில் தொண்டாற்றி வந்துள்ளார்கள். இதனை தவிர காதியானில் பல நிலங்கள் விளைநிலங்களாக இல்லாமல் இருந்தன. அதனை விளைநிலங்களாக மாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இரக்க

குணம் கொண்டவரும், இவர் அறிவு மற்றும் தூய சேவையாளர் ஆவார். கித்மத்தே கல்க் செய்வதை ஆர்வமாகக் கொண்டவராவார். பால், காய்கறிகள், தானியங்கள் போன்றவை வீட்டிலேயே இருந்ததால் தினமும் அதனை பல்வேறு வீடுகளுக்கு எந்தவித கைமாறும் இல்லாமல் அனுப்பி வைப்பார்கள். ஜல்ஸா ஸாலானா காதியானில் பழைய விருந்தினர்களை நன்றாக கவனித்து வந்துள்ளார்கள். அவர்களது இருப்பிடம், உணவு போன்றவற்றிற்காக தனது சக்திக்கும் மீறி செலவு செய்து வந்துள்ளார்கள். மிகவும் இனிய குணமுடையவர். தொழுகை, நோன்பு போன்றவற்றை கடைபிடிப்பவராகவும், கலப்பற்ற மனிதராகவும் விளங்கினார்கள். பிள்ளைகளுக்கு சிறந்த முறையில் தர்பிய்யத் கொடுத்து வந்தார்கள். இவர் மூஸியாகவும் இருந்திருக்கிறார்கள். இவருக்கு 4 மகன்கள் உள்ளனர். அதில் ஒருவர் கண்ணியத்திற்குரிய டாக்டர் முஹம்மது ஆரிப் சாஹிப், ஜல்ஸா ஸாலானா ஆபீஸர் மற்றும் நாஸிர் பைத்துல்மால் கரீச் என்ற பொறுப்பில் இருந்து வந்தார்கள். இவர் கடந்த வருடம் மரணமடைந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடைய தர்ஜாவை உயர்த்துவானாக.

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய அஹ்மது யூசுப் அல்காபூரி சாஹிப். இவர் ஷஹீத் ஆவார். இவர் சிரியாவைச் சேர்ந்த அரபு நாட்டைச் சேர்ந்தவர் ஆவார். இவர் கடந்த மாதம் ஷஹீதாக்கப்பட்டார்கள். இன்றைய நாட்களில் அங்கு கலவரம் ஏற்பட்டு வருகிறது. அந்த கலவரத்தில் இவர் ஷஹீதாக்கப்பட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவருடைய சம்பவம் எவ்வாறானதென்றால் இவர் ஆகஸ்டு 31 ஆம் தேதி அஸர் நேரத்தில் வேலையை முடித்து விட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார். இவர் நடக்க வேண்டிய பகுதி திடீர் திடீரென்று கலவரம் ஏற்படக்கூடிய பகுதியாகும். அங்கு பல்வேறு சமயங்களில் குண்டுகள் பாய்ந்து கொண்டிருக்கக்கூடிய இடமாகும். அவருக்கு காது கொஞ்சம் சரியாக கேட்காது. சம்பவத்தின் போது சிலர் அவரை அப்பகுதிக்குப் போக வேண்டாம் என தவிர்த்தனர். ஆனால் காது சரியாக கேட்காத காரணத்தால் அதனை புரிய முடியாமல் அப்பகுதிக்கு சென்றுள்ளார். அப்போது அவரது தலையில் தோட்டாக்கள் பாய்ந்துள்ளது. சம்பவ இடத்திலேயே மரணமடைந்து விட்டார். 1976 -ல் பிறந்தார்கள். பிரைமரி வரைக்கும் படித்துள்ளார்கள். வேலை செய்து வந்தார். இவர் திருமணம் ஆகாதவர் ஆவார். 10 வருடத்திற்கு முன்பாகவே இவருக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி கிடைத்திருக்கின்றது. ஆனால் கடந்த வருடம் நவம்பர் மாதம் இவருக்கு பைஅத் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதாவது ஏறக்குறை 1 வருடத்திற்கு முன்பு பைஅத் செய்துள்ளார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஒரு சகோதரியின் மகன் யூனுஸ் சாஹிப் என்னிடம் ஜமாஅத்தைப் பற்றி மிக விரிவாகப் பேசினார்கள். அவரது பேச்சைக் கேட்டு நான் அவருக்கு முன்பாகவே பைஅத் செய்து விட்டேன். அவருக்கு 1 மாதத்திற்குப் பிறகு தான் வாய்ப்பு கிடைத்தது. மேலும் இவரது சகோதரி மற்றும் சகோதரியின் மகள்கள் இவருடைய தப்லீக் மூலம் பைஅத் செய்துள்ளனர். இவர் பைஅத்திற்கு முன்பு அல்வி கூட்டத்தினருடன் தொடர்பு கொண்டிருந்தார். இவருக்கு ஒருவிதமான பிரஸ்ஸர் கொடுக்கப்பட்டது. ஆனால் இவர் உண்மையான உள்ளத்துடன் பைஅத் செய்தார். ஜமாஅத்தின் எல்லா நிகழ்ச்சியிலும் கலந்து கொள்வார். மர்ஹூம் மிக உயர்ந்த நல்லொழுக்கத்தைக் கொண்டவராவார். இயல்பான பண்புகளைக் கொண்டவராகவும், மற்றவர்களுக்கு உதவிபுரியக்கூடிய எண்ணம் அதிகமாக இருந்தது. அல்லாஹ் இவரது தர்ஜாவை உயர்த்துவானாக. இவர் மீது கருணை காட்டுவானாக. இந்த இருவரின் ஜனாஸா ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நடைபெறும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 11.11.2011**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456